பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 28 ஞாயிற்றுக்கிழமை 16.10.2022 கதிர் 232

## கொழும்பில் பெண்களை பயன்படுத்திக் கொள்ளை

### பிரதான சூத்திரதாரி கைது

கொழும்பில் பெண்களைப் பயன்படுத்தி கொள்ளை மோசடியில் ஈடுபட்டு வந்த முக்கிய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் போதைப்பொருள் வைத்திருந்ததால், அவரைக் கைது செய்ய பொலிஸ் அதிகாரிகள் கடும் 8

# மஹிந்தவின் வருகையால் கொந்தளித்த நாவலப்பிட்டி

## சஜித் அணியினர் 16 பேர் கைது





சிறிலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் கூட்டத்தில் பங்கேற்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று நாவலப்பிட்டிக்குச் சென்றிருந்த நிலையில், 2

## இரண்டு இலட்சம் மக்களால் ராஜபக்ஷக்கள் விரட்டியடிப்பு

### வெளிவந்தது புலனாய்வு அறிக்கை



புலனாய்வுத் தகவல்களின் பிரகாரம் ராஜபக்ச அரசுக்கு எதிரான காலிமுகத்திடல் போராட்டத்தில் இரண்டு இலட்சத்துக்கும் குறைவானோரே கலந்துகொண்டனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன 2

## தவறைத் திருத்திக்கொள்ளாமல் முடங்கிக் கிடப்பதே வெட்கக்கேடு

### நாவலப்பிட்டியில் மஹிந்த முழக்கம்



இலங்கையில் அமைதி நிலவுவதை சிலர் விரும்பவில்லை. இலங்கையர்கள் சுயமாக எழுவதையும் அவர்கள் சகித்துக்கொள்ளவில்லை. கையேந்தும் நிலையையே விரும்புகின்றனர். இந்த நிலைமை மாற வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து பொது வேலைத்திட்டத்தின் கீழ் பயணிக்க வேண்டும்.

- இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் 8

## சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம்

### மாவட்ட செயலர்களுக்கு ரணில் பணிப்புரை



சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகளை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒத்துழைப்புடன் துரிதமாக ஒருங்கிணைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார். 8

### எம்மை விமர்சித்தோரிடம் தற்போது கறுப்புப் பணம்

#### சாடுகின்றார் நாமல்

பயங்கரவாதச் செயற்பாடுகள் ஊடாக அல்லாமல் ஜனநாயக வழியிலேயே ஆட்சி மாற்றம் இடம்பெற வேண்டும். எந்தவொரு தேர்தலையும் சந்திக்க நாம் தயார். அதற்காகவே தொகுதி மட்டத்திலான கூட்டங்களும் இடம்பெறுகின்றன. 8

## தேர்தலை எதிர்கொள்ள 'மொட்டு'க்கட்சி தயாராம்

### மஹிந்தானந்த கூறுகின்றார்

எந்நேரத்தில் வேண்டுமானாலும், எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தயாராகவே உள்ளது. நாவலப்பிட்டி தொகுதியிலும் வெற்றிக்கொடி பறக்கும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் நாவலப்பிட்டி நகரில் இன்று நடத்தப்பட்ட போராட்டத்தில் 148 பேர் மாத்திரமே 2

### சிறுமி துஷ்பிரயோகம்; இளம் பிக்கு சிக்கினார்

மாத்தறை புகுல்வெல்ல விகாரை ஒன்றில் 28 வயதுடைய பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விகாரைக்கு வழிபட வந்த 14 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்ட நிலையிலேயே பிக்கு கைது செய்யப்பட்டுள்ளார். மாத்தறை பிரதேச சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத் துக்குக் கிடைத்த

முறைப்பாட்டின் பிரகாரம் நீண்ட விசாரணையின் பின்னர் பிக்கு கைது செய்யப்பட்டார் என்று பணியகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவின் உயர் அதிகாரி புதனன்று இலங்கைக்கு விஜயம்





தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியங்களுக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ, எதிர்வரும் புதன்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அவருடன் அமெரிக்க அரசின் உயர்மட்டக் குழுவும் 2

### இருபதுக்கு இருபது உலகக் கிண்ணத் தொடர்:

## முதல் போட்டியிலேயே இலங்கை படுதோல்வி

### நமீபியா சரித்திர வெற்றி



2022 ஆடவர் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணத் தொடரில், இன்றைய முதலாவது போட்டியில் நமீபியாவை எதிர்த்தாடிய இலங்கை அணி படுதோல்வியடைந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தேர்தலை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பங்கேற்றனர் என்றும் அவர் கூறினார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாவலப்பிட்டி தொகுதி ஆசனக் கூட்டம் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் இன்று நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே மஹிந்தானந்த மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று நடைபெறும் கூட்டம் மாவட்டக் கூட்டம் அல்ல, ஒரு தொகுதிகே கூட்டமாகும். ஆனாலும், மக்கள் அணி திரண்டுள்ளனர். தாங்கள் இன்னமும் ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன்தான் நிற்கின்றோம் என்ற தகவலை அவர்கள் வழங்கியுள்ளனர். ஒரு சிலர் எம்மை விட்டுச் சென்றிருக்கலாம். ஆனால், எமது சக்தி பலமாகவே உள்ளது.

நாவலப்பிட்டியில் நடைபெறும் கூட்டத்தைக் குழப்ப வேண்டும், மக்களின் வருகையைத் தடுக்க வேண்டும் என்பதற்காக நாவலப்பிட்டியில் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்துமாறு தமது கட்சியின் தொகுதி அமைப்பாளருக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆணையிட்டுள்ளார். சமூகவலைத்தளங்களிலும் பாரிய எதிர்ப்புப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், சஜித் அணியைச் சேர்ந்த 148 பேர் மட்டுமே போராட்டத்தில் பங்கேற்றுள் ளனர். கண்டியில் இருந்தும் ஆட்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

தேர்தலுக்கு அஞ்சும் கட்சி எமது கட்சி அல்ல. எந்நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயார்.

கண்டி மாவட்டமும், நாவலப்பிட்டித் தொகுதியும் தேர்தலுக்குத் தயார் என்ற செய்தி இந்தக் கூட்டம் மூலம் வழங்கப்படுகின்றது.

தேர்தல் நடத்தப்பட்டால் வெற்றி நிச்சயம் என்ப தையும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. சவால்களை ஜனாதிபதி சிறப்பாக எதிர்கொள்கின்றார். அடுத்த இரு வருடங்களுக்கு அவருக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும். தவறுகளைத் திருத்திக்கொண்டு எமது கட்சி வெற்றிநடை போடும் - என்றார்.

## மகிந்தவின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதற்கு எதிராகப் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மக்களுக்கு பாரிய சுமையாக மாறியுள்ள பொருட்களின் விலைகளை உடனடியாகக் குறைக்குமாறு இந்தப் போராட்டத்தின்போது அரசிடம் வலியுறுத்தப்பட்டது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கூட்டம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் ஆரம்பமாகி, மொட்டுக் கட்சியின் முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் இன்று இடம்பெற்றது.

அதன்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளரும் முன்னாள் நகர சபை தலைவருமான சசங்க சம்பத் சஞ்சீவ தலைமையில் மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்த பொலிஸார், கலைந்து செல்லுமாறு போராட்டக்காரர்களை அறிவுறுத்தினர்.

இதன்போது, பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதையடுத்து சசங்க சம்பத் சஞ்சீவ உட்பட போராட்டத்தில் ஈடுபட்ட 16 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

அதேவேளை, நாவலப்பிட்டி நகருக்கு இன்று பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

## முதல் போட்டியிலே..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அணி முதலில் பந்து வீசத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பாட்டத்தில் களம் இறங்கிய நமீபிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களால் தமது அணிக்கு வலுவான ஓட்டங்களைப் பெறமுடியவில்லை.

இலங்கை அணியின் பந்து வீச்சாளர்களின் ஆக்ரோமான பந்து வீச்சுடன் நமீபிய துடுப்பாட்ட வீரர்களில் சிலர் விரைவாகக் களத்திலிருந்து விடைபெற்று சென்றதைக் காணமுடிந்தது.

நமீபிய அணியின் முதல் துடுப்பாட்ட வீரர்கள் மூவரும் 5 ஓவர்கள் நிறைவடைவதற்குள் ஆட்டமிழந்தனர்.

நமீபிய அணி அவ்வப்போது மெதுவாகத் துடுப்பெடுத்தாடிய போதிலும், நமீபிய துடுப்பாட்ட வீரர்கள் விளாசிய அபாரமான சிக்ஸர்கள் மற்றும் பவுண்டரிகளால் 7 ஆவது விக்கெட்டுக்கு ஓட்ட எண்ணிக்கை வலுப்பெறத் தொடங்கியது. நமீபிய அணியில் ஜான் ஃப்ரைலின்க் மற்றும் ஜே.ஜே. ஸ்மிட் ஆகியோர் முறையே 43 மற்றும் 31 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக பிரமோத் மதுஷான் 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இந்நிலையில், 164 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி இலங்கை அணி துடுப்பாட்டத்தைத் தொடங்கியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான குசல் மெண்டிஸ் மற்றும் பெத்தும் நிஸ்ஸங்க ஆகியோர் முறையே 6 மற்றும் 9 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர்.

எவ்வாறாயினும், அணி சார்பில் அதிகப்படியாக பானுக ராஜபக்ஷ 20 ஓட்டங்களையும், அணித்தலைவர் தசுன் ஷானக்க 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

அதன்பின்னர் களம் நுழைந்த வீரர்கள் அனைவரும் குறைந்த ஓட்டத்தில் ஆட்டமிழந்தனர்.

அடுத்தடுத்து இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் சரியத் தொடங்கிய நிலையில் இலங்கையின் வெற்றிக்கான சாத்தியம் குறையத் தொடங்கியது.

அதற்கமைய, 19 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 108 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

அதன்படி, 2022 இருபதுக்கு இருப்பது உலகக்கிண்ணத் தொடரின் முதலாவது போட்டியில் நமீபிய அணி 55 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

## இரண்டு.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த வாரம் போராட்டம் பற்றிய அறிக்கையைச் மர்ப்பித்தனர்.

இந்த அறிக்கையின் பிரகாரம் இரண்டு இலட்சத்துக்கும் குறைவானோரே இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

போராட்டத்துக்கு அச்சப்பட்டமையால் நாம் ஒரு அடி பின்னோக்கி நகர்ந்தோம். உண்மையில் இதன் பின்னணி அச்சம் கிடையாது. இதுவொரு தந்திரோபாயம் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்
douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha, Colombo 10
0777755598 | 0701630209 | 0772211211
www.dslsolarenergy.com
MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK
BOC
சம்பத் வங்கி SampathBank
COMMERCIAL BANK
HNB

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலின் காட்டில் நல்ல மழை

அரசமைப்புக்கான 22 ஆவது திருத்தம் இந்த வாரமும் நாடாளுமன்றுக்கு வருவது பெரும் சந்தேகமே என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

முதலில் இது அரசமைப்புக்கான திருத்தம். நிச்சயம் மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை ஆதரவுடன்தான் இதனை – 22 ஆவது திருத்தத்தை – நிறைவேற்ற முடியும்.

ஏற்கனவே தடுமாறிப் போய் இருக்கும் ஆளும் பொதுஜன பெரமுன தான் நாடாளுமன்றத்தில் வைத்திருந்த மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வலுவை எப்போதோ இழந்து விட்டது என்பது தெளிவு.

எனினும், இந்த அரசமைப்பு திருத்தம், முன்னர் 19 ஆவது திருத்தம் மூலம் நாடாளுமன்றத்திடம் இருந்து பிடுங்கப்பட்டு நிறைவேற்றதிகார ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருக்கும் கட்டுமட்டில்லா அதிகாரங்களில் கணிசமான ஒரு பகுதியையாவது நாடாளுமன்றத்திற்குத் திருப்பி அளிப்பதால் – அதாவது, நிறைவேற்றதிகாரஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்டிக் குறைப்பதால் – அத்தகைய திருத்தத்தை எக்காரணம் கொண்டும் எதிர்க்கட்சிகள் எதிர்க்கா, ஆகவே அவற்றின் அனுசரணையுடன் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை சுலபமாகப் பெற்று இதை நிறைவேற்றி விடலாம் என்றுதான் ஆரம்பத்தில் சிந்திக்கப்பட்டது.

ஆனால் நிலைமை அப்படியல்ல என்பது இப்போது தெளிவாகி வருகின்றது.

ஆளும் தரப்பிலும் சரி, எதிர்த் தரப்பிலும் சரி, பல்வேறு குழுக்களாக பிரிந்து நிற்கும் அணிகள் ஒவ்வொன்றும், தத்தமது விருப்புக்கு ஏற்ற மாதிரி, 22 ஆவது அரசமைப்பு திருத்த வரைவுக்குப் புதிய திருத்தங்களை நிபந்தனைகளாக விதித்து, அவற்றை நிறைவு செய்தாலே அந்தத் திருத்தத்தை ஆதரிப்போம் எனத் தெரிவிக்கின்றன.

அந்த 22 ஆவது திருத்தத்துக்கு தேவையான மூன்றில் இரண்டு பங்கைப் பெறுவதற்கு இப்படி நாடாளுமன்றத்தில் உள்ள அணிகள் ஒவ்வொன்றும் விதித்திருக்கும் நிபந்தனைகளை ஏற்று வரைவுக்குத் திருத்தம் செய்தால், அந்த வரைவின் வடிவமே ஒரு குழப்ப ஆவணமாகப் போய்விடும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

போதிய – மூன்றில் இரண்டு பங்கு – ஆதரவை நாடாளுமன்றத்தில் திரட்டுவது சந்தேகம் என்ற நிலையிலேயே 22 ஆவது திருத்தம் கடந்த வாரத்துக்கு முந்திய வாரம் நாடாளுமன்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த நிலையில் கடைசி நேரத்தில் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த வாரம் நாடாளுமன்றத்தில் எடுக்கப்பட இருக்கின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ள இத்திருத்த வரைவு, அதே காரணத்துக்காக இம்முறையும்யும் ஒத்தி வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படி 22 ஆவது திருத்த விடயத்தில் நாடாளுமன்ற அணிகள் பிளவுபட்டிருப்பது 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்ற மாதிரி ஜனாதிபதி ரணிலுக்குத்தான் கொண்டாட்டமாக இருக்கும்.

நிறைவேற்ற அதிகார ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள கட்டுமட்டில்லா அதிகாரத்தை, நாடாளுமன்றம் பிளவுபட்டிருக்கின்றமையால் மீளப் பெற முடியாத நிலைமை நீடிக்குமானால் அந்த அதிகாரத்தை ரணில் விக்கிரமசிங்கவே நீடித்துத் தம் வசமே வைத்துக் கொண்டு பிரயோகிக்க முடியும்.

அப்படிப் பார்த்தால் ரணில் காட்டில் இந்த அரசியல் முடிவு – 22 ஆம் திருத்தத்திற்கு ஆதரவளிப்பதில்லை என்று பெரும்பான்மை எம்.பிக்கள் எடுத்துள்ள தீர்மானம் – நல்ல மழையை பொழிய வைத்திருக்கின்றது என்றுதான் அர்த்தம்.

# வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரும் இயலுமை ஜனாதிபதி ரணிலிடம் உள்ளதாம்!

## நாமல் அபரிமித நம்பிக்கை



யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு மஹிந்த ராஜபக்ஷவிற்கு இயலுமை காணப்பட்டதை போன்று, வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வந்தமைக்கான இயலுமை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


பொலன்னறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையிலேயே காலிமுகத்திடல் போராட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முடிவுக்குக் கொண்டு வந்தார் எனவும் நாமல் தெரிவித்தார்.

இதேவேளை, மனித உரிமைகள் தொடர்பில் பேசிக்கொண்டிருந்த ரணில் விக்ரமசிங்க தற்போது அவ்வாறு கூறுகின்றமை கிடையாது என்றும் மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவு வழங்கினாலும் தற்போது அவர் அவ்வாறு செயற்படுபவர் அல்லர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டின் பொருளாதாரத்துக்கு விவசாயிகள் வலுவான காரணி

## பிரதமர் கூறுகிறார்



நாட்டின் பொருளாதார பயணத்தை நம்பகமான எதிர்காலமாக விவசாயிகளால் மாற்ற முடியும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கிராமிய பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் புத்தளம் மாவட்ட ஆரம்ப முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல் முரண்பாடுகளை உருவாக்குவதை விடுத்து தற்போதைய நெருக்கடிக்கு முகங்கொடுக்க அனைவரும் கைகோர்க்க வேண்டுமென பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலைய செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பமாகின



திருத்தப் பணிகள் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் இரண்டாம் அலகு அடுத்த வாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப் படவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது மின்னுற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் 78 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி 300 மெகாவோட் மின்சாரம் அடுத்த வாரம் தேசிய கட்டமைப்பில் இணைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய அடையாள அட்டையை பெறுவதற்கான கட்டணம் அதிகரிப்பு

தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கான கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக பொது பாதுகாப்பு அமைச்சு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

நவம்பர் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி, முதன்முறையாக தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு 200 ரூபா கட்டணம் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டையின் நகலைப் பெறுவதற்கு 1000 ரூபா கட்டணம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அத்துடன் தேசிய அடையாள அட்டையின் திருத்தப்பட்ட பிரதியை வழங்குவதற்கு 500 ரூபாவும் காலாவதியான தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக புதிய தேசிய அடையாள அட்டையைப் பெறுவத்கு 200 ரூபாவும் அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பாக். பயங்கரவாதிகளின் திடீர் தாக்குதலில் மாகாண முன்னாள் தலைமை நீதிபதி சாவு!



இஸ்லாமாபாத், ஒக்.16

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ஒருவர் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பலுசிஸ்தானில் உள்ள ஒரு மசூதிக்கு வெளியே நின்று கொண்டிருந்த உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி முஹம்மது நூர் மெஸ்கன்சாய் என்பவர் மீதே பயங்கரவாதிகள் திடீரென சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

உடனடியாக, அவர் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

அந்நாட்டின் நீதித்துறையில் தைரியமான நீதிபதி என்று போற்றப்பட்ட முன்னாள் நீதிபதி முஹம்மது நூர் மெஸ்கன்சாய், ரியாவுக்கு எதிராக ரிஷபா அடிப்படையிலான வங்கி முறையை அறிவிக்கும் முக்கிய தீர்ப்பை வழங்கியவர் ஆவார்.

பலுசிஸ்தான் முதலமைச்சர் மிர் அப்துல் குதூஸ் பிசென்ஜோ முன்னாள் நீதிபதி மெஸ்கன்சாய் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

மேலும், இது கோழைத்தனமான நடவடிக்கை என்று கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் இந்த ஆண்டு அதிக எண்ணிக்கையிலான பயங்கரவாதச் சம்பவங்கள் செப்டம்பர் மாதத்தில் பதிவாகியுள்ளன என்று 'சண்டை மற்றும் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்யும் பாகிஸ்தான் நிறுவனம்' தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்தை விட செப்டம்பர் மாதத்தில் தீவிரவாத தாக்குதல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## புதிய பிரி. பிரதமரைப் பதவி விலக்க அவர் கட்சிக்குள்ளேயே பனிப்போர்!



லண்டன், ஒக்.16

இங்கிலாந்தில் தற்போது பிரதமராக உள்ள லிஸ் டிரஸ் மீதான அதிருப்தி அதிகரித்து வருகின்ற நிலையில், இங்கிலாந்து பிரதமராக ரிஷி சுனக் நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்து தீவிரமடைந்து வருகிறது.

தற்போது பிரதமராக உள்ள லிஸ் டிரஸ், கடந்த மாதம் வரி குறைப்புகளை ஆதரிக்கும் வகையில் திட்டங்களை வெளியிட்டமையுடன் கடந்த மாதம் மினிபட்ஜெட்டில் வரிகுறைப்பும் அறிவிக்கப்பட்டது. மேலும் கடன் வாங்கி இதை நிவர்த்தி செய்யலாமம் எனவும் தெரிவிக்கப்பட்டது. பிரதமரின்

இத்திட்டத்திற்கு சொந்த கட்சி எம்.பி.க்கள் அதிருப்தி தெரிவித்தனர். நாட்டின் பொருளாதாரம் மோசமான நிலையில் உள்ளமையால் இதனை பிரதமர் மறு பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் கருத்து தெரிவித்தனர்.

இந்நிலையில், இங்கிலாந்து நிதி அமைச்சர் குவாஸி குவார்டங்கை பதவியிலிருந்து அதிரடியாக நீக்கி பிரதமர் லிஸ் டிரஸ் உத்தரவிட்டார். மேலும், புதிய நிதி அமைச்சராக ஜெர்மி ஹன்ட் என்பவரை நியமித்துசெய்தியாளர்களுக்கு அறிமுகப்படுத்தினார் என தகவல்கள் வெளியாகின.ப்பிரதமரின் இந்த அதிரடி நடவடிக்கைகள், சர்வதேச அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

இந்நிலையில், இங்கிலாந்து நாட்டிக் 'தி டைம்ஸ்' நிறுவனம் நடத்தியவ்கருத்துக் கணிப்பொன்றில், ஆளும்கட்சி ஆதரவாளர்களில் கிட்டத்தட்ட ஐம்பது வீதமானோர், தலைமைத் தேர்தலில் கட்சி தவறான வேட்பாளரை தேர்ந்தெடுத்ததாகக் கருதுகின்றனர் எனக் கூறப்படுகின்றது. கட்சித் தலைவராகவும், பிரதமராகவும் ரிஷி சுனக் மற்றும் துணைப் பிரதமராக பென்னி மோர்டான்ட் நியமிக்கப்பட வேண்டும் என்ற முடிவை முன்னெடுப்பது குறித்து ஆளும்கட்சி எம்.பி.க்கள் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர்.

மேலும், முன்னாள் பிரதமர் போரிஸ் ஜான்சனின் விசுவாசிகள், இத்தகைய சதி நடவடிக்கை, 'ஜனநாயக விரோத செயல்' என்று கண்டனம் தெரிவித்துள்ளமையுடன், அரசாங்கம் என்பது 'பாட்டிலை சுழற்றிவிடும் விளையாட்டு அல்ல'. இத்தகைய நடவடிக்கை, பிரதமரை பதவி நீக்கம் செய்வது மட்டுமல்லாமல் ஜனநாயகத்தை கவிழ்க்க நடத்தப்பட்ட சதி எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், இங்கிலாந்து வெளியுறவு செயலாளர் ஜேம்ஸ் கூறுகையில், டிரஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு, டிரஸை மாற்றுவது பற்றி யோசிப்பது அரசியல் ரீதியாகவும் பொருளாதார துறையிலும் பேரழிவு தரும் மோசமான யோசனையாக இருக்கும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உக்ரைனுக்கு மீண்டும் அமெ. இராணுவ உதவி: சவுதியும் 400 மில்லியன் டொலர் வழங்க முடிவு



வொஷிங்டன், ஒக்.16

உக்ரைன் ரஷ்யா போர் மீண்டும் உச்சமடைந்து வரும் நிலையில், உக்ரைனுக்கு கூடுதலாக 725 மில்லியன் டொலர்கள் இராணுவ உதவியை அமெரிக்கா அனுப்பும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனின் பல நகரங்கள் மீது ரஷ்யா இந்த வாரம் 84 ஏவுகணைகளை ஏவி தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியது. அதில் குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர் என்று உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

இதனை தொடர்ந்து, உக்ரைனுக்கு கூடுதலாக இராணுவ உதவியை அமெரிக்கா அனுப்பும் என அமெரிக்க வெளியுறவு செயலாளர் அண்டனி பிளிங்கன் நேற்று ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மக்கள் தங்கள் சுதந்திரம் மற்றும் சுயாதீனத்தை அசாதாரண தைரியம் மற்றும் எல்லையற்ற உறுதியுடன் பாதுகாக்கிறார்கள், உக்ரைன் மக்களுடன் நாங்கள் தொடர்ந்து நிற்போம் என்று கூறினார்.

ஹிமார்ஸ் ரொக்கெட் லோஞ்சர்கள், வெடிமருந்துகள் மற்றும் கவச வாகனங்கள் உள்ளிட்ட கூடுதல் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் உக்ரைனுக்குக் கூடுதலாக அனுப்பப்படும். இதன் மூலம், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அரசாங்கத்தின் கீழ் மொத்தம் 18.3 பில்லியன் டொலர்கள் அளவுக்கு இராணுவ உதவிகளை உக்ரைனுக்கு அமெரிக்கா அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், உக்ரைனுக்கு மனிதாபிமான உதவியாக 400 மில்லியன் டொலர்கள் நிதியுதவியை சவுதி அரேபியாவும் வழங்க உள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கிக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசும் போது உக்ரைன் - ரஷ்யா இடையே சண்டையை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து விதமான முயற்சிகளைத் தொடர சவுதி அரேபியா தயாராக உள்ளது. இருதரப்புக்கு மிடையே மத்தியஸ்தம் செய்ய மற்றும்ஃஆதரவளிக்க தயார்" என்று தெரிவித்தார். இந்நிலையில், உக்ரைனுக்கு இந்த நிதியுதவியை சவுதி அரேபியா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொலம்பியாவில் பஸ் கவிழ்ந்து விபத்து இருபது பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்



தென் அமெரிக்க நாடான கொலம்பியாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள துறைமுக நகரமான டுமாகோவிற்கும் காலிக்கும் இடையே பஸ் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் 20 பேர் உயிரிழந்தனர் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. மேலும், படுகாயமடைந்த 15 பேர் அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்ட. செல்லப்பட்டு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து குறித்து போக்குவரத்து அதிகாரிகள் தரப்பில் கூறும்போது -

விபத்து நடந்த பகுதி பனிமூட்டமான மற்றும் வளைவுகள் உள்ள பகுதி என்பதால், பஸ் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்திருக்கும் என்று கூறப்படுகிறது. 9 மணி நேர போராட்டத்தின் பின்னரே பொலிஸாராலும் தீயணைப்புத் துறையினராலும் கவிழ்ந்த பஸ் நிமிர்த்தப்பட்டதாகவும், பஸ்ஸில் சிக்கியவர்களை மீட்க முடிந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உலகப் பட்டினிக் குறியீட்டுப் பட்டியல் வெளியீடு; 121 நாடுகளில் இந்தியா 107 ஆவது இடத்திலாம்!



புதுடெல்லி, ஒக்.16

உலக அளவில் பட்டினி மற்றும் ஊட்டசத்துவ குறைபாடு ஆகியவற்றை ஆய்வு செய்து பட்டினிக் குறியீடு பட்டியல் வெளியிடப்படுகின்ற நிலையில், 121 நாடுகள் கொண்ட இந்தப் பட்டியலில் இந்தியா 107ஆவது இடத்திற்குத் தள்ள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இந்த பட்டியலில் இந்தியா 101 ஆவது இடத்தில் இருந்ததுடன் ஒரே ஆண்டில் இந்தியா 6 இடங்கள் பின் தங்கியுள்ளமை அதிர்ச்சி அளிப்பதாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அண்டை நாடுகளான பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளத்தை விட இந்தியா இந்தப் பட்டியலில் பின் தங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. சீனா, துருக்கி, குவைத் உள்ளிட்ட 17 நாடுகள் இந்தப் பட்டியலில் முன்னிலை வகிக்கின்றமையுடன் இந்த நாடுகளின் பட்டினிக் குறியீடு 5-க்கும் குறைவாகவே இருக்கிறன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக பட்டினிக் குறியீடு குறித்து வெளியான அறிக்கையை சுட்டிக்காட்டி பா.ஜ.க. அரசை முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் விமர்சித்துள்ளார். ப. சிதம்பரம் தனது டுவிட்டரில் இது பற்றி கூறுகையில், கடந்த 2014 ஆம் ஆண்டு முதல்இந்தியா தொடர்ந்து பின் தங்கியே வருகிறது. ஊட்டச்சத்து குறைபாடு, பட்டினி, வளர்ச்சி குன்றிய நிலை உள்ளிட்ட உண்மையான பிரச்சினைகளுக்கு பிரதமர் மோடி எவ்வாறு தீர்வு காணப்போகிறார் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

சர்வதேச அளவிலான பட்டினி குறியீட்டு அறிக்கையை தயாரித்த அயர்லாந்தை சேர்ந்த உதவி அமைப்பு மற்றும் ஜெர்மனியின் வெல்ட் ஹங்கர் ஹில்பே ஆகிய இரு அமைப்புகளும் இந்தியாவில் காணப்படும் பட்டினி அளவு மிக தீவிரமானது என்று வரையறுத்துள்ளப். ஊட்டச்சத்து குறைபாடு, 5வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகள் சத்துணவு குறைபாட்டால் தங்கள் உயர்த்துக்கு ஏற்ற எடை இல்லாமல் இருத்தல், வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாமல் இருத்தல், 5வயதுக்கு உட்பட்ட குழந்தை

உயிரிழப்புகள் ஆகிய காரணிகளை அடிப்படையாக வைத்து உலக பட்டினி குறியீடு கணக்கிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தி மொழியில் மருத்துவப் பட்டப்படிப்பு: மத்திய பிரதேசத்தில் இன்று ஆரம்பமாகிறது



போபால், ஒக்.16

இந்தியாவில் முதல் முறையாக, மத்தியப் பிரதேசத்தில் இந்தி மொழியில் மருத்துவப் படிப்பை பயிலும் திட்டத்தை ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ா இன்று தொடங்கி வைக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

தாய் மொழியில் கல்வி கற்பது, புரிதலுக்கு எளிமையாக இருக்கும். இதனால், மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட முக்கிய படிப்புகளை உள்ளூர் மொழியில்

கற்பிக்கும் திட்டத்தை ஒன்றிய அரசு அமல்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளது.

இதன்படி, நாட்டில் முதல் முறையாக மத்தியப் பிரதேசத்தில் இந்தி மொழியில் எம்.பி.பி.எஸ். (மருத்துவம்) படிப்பு தொடங்கப்பட உள்ளது. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, போபாலில் இன்று நடக்கும் நிகழ்ச்சியில் இந்தியில் மொழி?பெயர்க்கப்பட்ட முதலாம் ஆண்டு எம்.பி.பி.எஸ். பாடப் புத்தகங்களை வெளியிட்டு,இந்தியில்எம்.பி.பி.எஸ். படிக்கும் திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

இது குறித்து, இம்மாநில முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான் கூறுகையில், ‘மருத்துவம், பொறியியல் படிப்புகளை இந்தியில் கற்பிக்கவோ, படிக்கவோ முடியாது என்ற எண்ணத்தை இந்த செயல்பாடு மாற்றிவிடும். இந்தி மொழியில் கல்வி கற்பதன் மூலமாக வாழ்க்கையில் முன்னேறலாம் என்ற எண்ணத்தை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான ஒரு படியாக இது அமையும். பயிற்று மொழி ஒருவரின் தாய் மொழியில் இருக்க வேண்டும் என்பது மோடியின் விருப்பமாகும், என்றார்.

# உலகின் இரண்டாவது மிகப்பெரிய கேபிள் மேம்பாலம் ஆந்திரா – தெலங்கானா இடையே கிருஷ்ணா நதி மீது!



திருமலை,ஒக்.16

ஆந்திரா - தெலங்கானா இடையே இந்தியாவில் முதல்முறையாக கிருஷ்ணா நதியின் மீது ரூ.1,082.56 கோடியில் கேபிள் மேம்பாலம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆந்திர மாநிலம் மற்றும் தெலுங்கானாவை இணைக்கும் விதமாக கிருஷ்ணா நதியில் புதிய மேம்பாலம் கட்டப்பட உள்ளதாக ஒன்றிய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்கரி, டிவிட்டரில் நேற்று முன்தினம் இரவு பதிவிட்டுள்ளார். அந்த பதிவில், ‘இந்த வகை பாலம் உலகிலேயே இரண்டாவதாகவும், நம் நாட்டிலேயே முதலாவதாகவும் இருக்கும். ரூ.1,082.56 கோடி செலவில் 30 மாதங்களில் இது கட்டி முடிக்கப்படும்,’ என கூறப்பட்டுள்ளது.

பாலத்தின் அடிப்பகுதியில் சீனாவில் உள்ளது போல், கிருஷ்ணா நதியின் அழகை கண்டு ரசித்து கொண்டே செல்வதற்காக பிரத்யேக கண்ணாடி நடைபாதை பொருத்தப்படவுள்ளதுடன், பாலத்தில் கேபிள்கள் கோபுர வடிவில் சிறப்பு விளக்குகளுடன் அமைக்கப்படும். இதன் மீது பயணிக்கும்போது, நல்லமல்லா காடுகள், மலைகள் மற்றும் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கம் போன்றவற்றின் இயற்கை அழகை ரசிக்கலாம். இந்த பாலத்தின் ஒருபுறம் தெலங்கானாவின் லலிதா சோமேஸ்வர சுவாமி கோயிலும், மறுபுறம் ஆந்திராவில் சங்கமேஸ்வரா கோயிலும் இருக்கும்.

இந்நிலையில், 18 ஆண்டு கால கோரிக்கையாக இருந்த இந்த திட்டம், அப்பகுதிப்மக்களின் கனவு தற்போது நனவாக உள்ளதாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஆடையைக் கழற்றிச் பரிசோதித்தமையால் தனக்குத் தானே தீ மூட்டிய பள்ளிமாணவி

## ஆசிரியர் கைது; ஜார்கண்ட் மாநிலத்தில் சம்பவம்

ராஞ்சி, ஒக்.16

ஆசிரியை ஒருவர், தனது உடைகளை கழற்றி பரிசோதித்ததைத் தாங்கிக் கொள்ள முடியாத மாணவி ஒருவர் தனக்குத் தானே தீமூட்டி உயிர் மாய்க்க முயற்சித்த சம்பவம் ஒன்று ஜார்கண்ட் மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள கிழக்கு சிங்பம் மாவட்டத்தில் உள்ள ஒரு பள்ளியில் 9 ஆம் வகுப்பு மாணவிகளுக்கு நேற்று முன் தினம் பரீட்சை நடைபெற்றபோது, பரீட்சை எழுந்த வந்த 9 ஆம் வகுப்பு மாணவி ஒருவர் பரீட்சையில் முறைகேடாக ’பிட் பேப்பர்’ வைத்துள்ளார் என ஆசிரியை

கருதியுள்ளார். இதனால், வகுப்பறைக்கு அருகே உள்ள அறைக்கு மாணவியை அழைத்து சென்ற அந்த ஆசிரியை மாணவியின் ஆடையை கழற்றி சோதனையிட்டுள்ளார். மாணவி எதிர்ப்பு தெரிவித்தும் ஆடையை கழற்றி சோதனை செய்துள்ளார்.

இந்நிலையில், ஆசிரியை தன் உடைகளை கழற்றி சோதனை செய்ததால் மாணவி மிகுந்த மன உளைச்சலில் இருந்துள்ளமையுடன், பாடசாலையிலிருந்து பரீட்சை முடிந்து மன உளைச்சலில் வீட்டிற்கு வந்த அந்த மாணவி வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் உடலில் மண்ணெண்ணையை ஊற்றி தீமூட்டியுள்ளார். இவ்வாறு தீமூட்டிய வலியால் மாணவி கதறி துடித்துள்ளார்.

மாணவியின் அலறல் சத்தம் கேட்ட அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில்சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

கடுமையான தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவிக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த பொலிஸார், பரீட்சையில் முறைகேடாக நடந்துகொண்டார் என மாணவியின் உடையைக் கழற்றிச் சோதனை செய்த ஆசிரியரைக் கைது செய்துள்ளமையுடன் மேலும், இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# புலமைப் பரிசில் மீள்பரிசீலனையில் 20 புள்ளிகள் கூடப் பெற்ற மாணவன்

(காரைதீவு சகா)

நேற்று வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் மீள் பரிசீலனை பெறுபேற்றின்படி காரைதீவில் மாணவன் ஒருவன் இருபது புள்ளிகள் வித்தியாசத்தில் சித்தி பெற்றுள்ளான்.



காரைதீவு இ.கி.மி. ஆண்கள் பாடசாலையில் பயின்ற செல்வன் சுரேஷ்குமார் ரதுசாயிதன் என்ற மாணவனே இவ்விதம் மீள் பரிசீலனையில் இருபது புள்ளிகள் கூடுதலாக பெற்று சித்தி பெற்றுள்ளான்.

கடந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இம் மாணவன் 145 புள்ளிகளை பெற்றிருந்தான். அம்பாறை மாவட்ட வெட்டுப் புள்ளி 147. எனவே இம் மாணவன் சித்தி பெறவில்லை எனக் கருதி பாராட்டு விழாக்களில் உள்வாங்கப்படவில்லை.

எனினும் இந்தப்புள்ளியில் திருப்தி அடையாத இவரது பெற்றோர் மீள்பரிசீலனைக்காக பாடசாலையில் விண்ணப்பித்தனர்.

மீள்பரிசீலனை பெறுபேறுகள் நேற்று கிடைத்தது. அதன்படி இம் மாணவன் பெற்ற புள்ளிகள் 165ஆகும்.

அதாவது இருபது(20) புள்ளிகள் கூடுதலாக கிடைத்தது. இது பெற்றோருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மாணவனின் தந்தையான ச.சுரேஸ்குமார்(விவசாய போதனாசிரியர்) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

இது இனிப்பான செய்தியாக காணப்பட்டாலும் தவறு எங்கு நடக்கின்றது என்பது தெட்டத் தெளிவாக புலனாகிறது .

எனவே பிஞ்சு உள்ளங்களை அவர்களது திறமையினை மழுங்கடிக்கும் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பரிசோதகர்கள் கண்டிப்பாக கண்டிக்கப்பட வேண்டியவர்கள்.. இப்படி ஒரு துரதிஷ்ட நிலைமை எந்த மாணவனுக்கும் அல்லது பெற்றோருக்கும் ஏற்படக்கூடாது என்று விரும்புகின்றேன் .

பொதுவாக மீள்பரிசீலனையில் ஓர் இரண்டு புள்ளிகள் குறையலாம். கூடலாம்.ஆனால் இவ்வாறு 20 புள்ளிகள் கூடி வருவது என்பது ஏற்றுக் கொள்ள முடியாது. எங்கோ ஓர் இடத்தில் பிழை நிச்சயமாக நடந்திருக்கின்றது என்று அர்த்தம். எனவே பரீட்சை திணைக்களம் இது விடயத்தில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும். அதிர்ச்சி வைத்தியம் பார்க்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கின்றேன்.– என்றார்.

# ரோட்டரி ஆளுநர் நேற்று திருகோணமலை விஜயம்







ரோட்டரி இலங்கை மாவட்ட - 3220 ஆளுநர் புபுது டி சொய்சா நேற்று திருகோணமலை ரோட்டரி கழகத்துக்கு விஜயம் செய்தார்.

ஆளுநரின் செயலார் குமார் சுந்தராஜும் மற்றும் உதவி மாவட்ட செயலார் அஜித் ஜெயவிக்கரமாவும் அவருடன் இணைந்து கொண்டார்கள் .

திருகோணமலை ரோட்டரி கழக தலைவர் கிட்ணதாஸ் விருந்தினர்களை வரவேற்று, வரவேற்புரையை நிகழ்த்தினார். செயலாளர் எஸ்.ஜெய்சங்கர் திரு கோணமலை ரோட்டரி கழக நட வடிக்கைகளின் அறிக்கை பற்றி சுருக்கமான விளக்கத்தை கொடுத் தார்.

புதிய உறுப்பினராக செலான் வங்கி முகாமையாளர் ஹரிதவர்ணன் திருகோணமலை ரோட்டரி கழகத்தில் இணைந்து கொண்டார்.

ஆளுநர் புபுது டி சொய்சா, தமது உரையில் திருகோணமலை ரோட்டரி கழக நடவடிக்கைககளை பாராட்டிய மையுடன் மேலும் அதிக தரமான இளம் உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும் என கோரிக்கை விடுத்தார். 2023-2024 வருடத்துக்கானதலைவராகதெரிவுசெய்யப்பட்ட வைத்தியர் சௌந்தரராஜன் நன்றியுரை நிகழ்த்தினார்.

# திருக்கோவிலில் குடும்பஸ்தர் சடலமாக ஆற்றிலிருந்து மீட்பு

திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பிலுவில் பெரிய களப்பு அருகே தாலிபோட்டாறு ஆற்றில் நண்பர்களுடன் சென்று நீராடி கொண்டிருந்த போது காணாமல் போன ஆண் ஒருவர் நேற்று முன்தினம் ஆற்றில் நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பிலுவில் முனை வீதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 33 வயதுடைய விநாயகமூர்த்தி விஜயராஜ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

தம்பிலுவில் பகுதியைச் சேர்ந்த 7 பேர் கொண்ட நண்பர்கள் சம்பவதினமான வியாழக்கிழமை முனைக்காடு ஆற்றுபகுதிக்கு சென்று அங்கு உணவு சமைத்துச் சாப்பிடச் சென்றுள்ளனர் .

இதன்போது அருகில் சென்று வெற்றிலை வாங்கி வருவதாக சென்ற இந்நபர் நீண்ட நேரமாகியும் திரும்பி வராததால் அவரை அங்கு தேடியுள்ளனர்.

இந்த நிலையில் காணாமல் போனவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆற்றில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக நீரில் மிதப்பதைக்கண்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சடலத்தை கரைக்கு இழுத்துக் கொண்டுவந்த பொலிஸார் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்தனர் பின்னர் சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது .

மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# சுகாதார அமைச்சின் மக்கள் முறைப்பாட்டு மையம் கல்முனைப் பிராந்தியத்தில் செயற்பட ஆரம்பித்து

(நூருல் ஹுதா உமர்)

உலக வங்கியின் நிதி அனுசரனையில் அமுல்படுத்தப்பட்டு வரும் ஊறீநீண செயற்றிட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சின் கீழமைந்த மக்கள் முறைப்பாட்டு மையம் கல்முனைப்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்வைத்தியகலாநிதிஜ.எல்.எம்.றிபாஸினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கமைவாக பொது மக்கள் 1907 என்ற இலக்கத்தின் ஊடாக சுகாதார நிறுவனங்கள் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும் என்பதுடன் எதிர்பாலத்தில் ஒயூ முறை ஊடாகவும் இணைய வசதிகள் மூலமும் இம் முறைப்பாடுகளை பதிவு செய்யும் விரிவாக்கல் நடைமுறை இடம்பெறவுள்ளதாகவும் பணிப்பாளர் இந்நிகழ்வில் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் மேற்படி திட்டத்தை மேற்பார்வைசெய்துஅமுல்படுத்தும்குழுவில்உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதி பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ வாஜித் இன்று நடைபெற்ற ஊறீநீண மீளாய்வு கூட்டத்தில் குறைதீர்க்கும் பொறிமுறை பற்றி தெளிவுபடுத்தினார்.

இந்தக் கூட்டத்தின் வளவாளராகக் கலந்து கொண்ட திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம் மாஹிர் கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் PSSP செயற்றிட்டத்தின் மூன்றாவது கட்ட நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் பிரதேச வைத்திய அதிகாரிகள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தியதுடன் இந்தச் செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதில் வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகளையும் கேட்டறிந்து கொண்டார்.



# சீரற்ற காலநிலையால் 11 மாவட்டங்களைச் சேர்ந்த 21 ஆயிரம் பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்!

## மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

நாட்டில் கடந்த சில தினங்களாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இருவர் உயிரிழந்துள்ளமை யோடு, 21 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக் கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கேகாலை மாவட்டத்தில் வரகாப்பொல – தும்பலியத்த பிரதேசத்தில் மாடி வீடொன்றின் மீது மண் மேடு சரிந்து விழுந்ததில் தாயும் மகனும் உயிரிழந்துள்ளனர்.

அன்றைய தினம் முற்பகல் மாடி வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்தது. இதன்போது மேற்படி வீட்டில் நால்வர் இருந்துள்ளனர். அவர்களில் ஆணொருவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து மண்சரிவில் சிக்கிய பெண் ணொருவர் உள்ளிட்ட மூவரைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்நிலை யிலேயே ஏனைய இருவரது சடலங்களும் நேற்று சனிக்கிழமை முற்பகல் மீட்கப்பட்டன.

இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் 47 வயதுடைய பெண்ணொருவரும், 24 வயதுடைய இளைஞன் ஒருவரும் ஆவர். இவர்கள் தாயும் மகனும வர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்விருவரது சடலங்களும் பிரேத பரிசோதனைக் காக வரகாப்பொல வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளன.

இது தொடர்பில் வரகாப்பொல பொலிஸார் மேலதி க விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த 12 ஆம் திகதி முதல் நேற்று முற்பகல் வரை சீரற்ற காலநிலையால் 11 மாவட் டங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 212 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 888 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை, காலி, திருகோணமலை கிளிநொச்சி, களுத்துறை, கம்பஹா, கொழும்பு புத்தளம், இரத்தினபுரி, கேகாலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இந்த மாவட்டங்களில் 2 வீடுகள் முழுமையாகவும், 117 வீடுகள் பகுதியளவிலும் சேதம டைந்துள்ளன.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் 64 குடும்பங்களைச் சேர்ந்த 264 பேர் 4 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன் கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறு வனம் மேலும் தெரிவித்துள்ளது.




# லயன் சிவ ரங்கநாதனின் அனுசரணையில் வாழ்வகத்துக்கு சுன்னாகம் லயன்ஸ் உதவி!

சுன்னாகம் லயன்ஸ் கழகமும் வாழ்வக சமூகமும் இணைந்து சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமாகிய கடந்த சனிக்கிழமை விழிப்பு ணர்வுப் பேரணி நடத்தி, வாழ்வகத்தில் பொதுக்கூட்டத்தையும் நடத்தினர்.

இந்த நிகழ்வில் மோதர மட்டக்குழிய லயன்ஸ் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினரும் கொமர்ஷியல் வங்கியின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாள ருமாகிய லயன் சிவகிருஷ்ணராஜா ரங்கநாதனின் நிதி அனுசரணையில் வாழ்வக விழிப்புலனற் றோர் இல்லத்துக்கு படுக்கை விரிப்புகள் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினூடாக அன்ப ளிப்புச் செய்யப்பட்டன.

லயன் எஸ்.ரங்கநாதன், தனது தந்தை சிவ கிருஷ்ணராஜாவின் ஞாபகார்த்தமாக இதனை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சுக்களின் கீழ் சில நிறுவங்கள் இணைப்பு

## வர்த்தமானி அறிவிப்பு

சுகாதாரம், ஊடகம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் மின்சாரம், எரிசக்தி ஆகிய இராஜாங்க அமைச்சுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, தனியார் மருத்துவ ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு 1990 சுவாசாரியா அறக்கட்டளை, தேசிய புகையிலை மற்றும் ம துபான அதிகாரசபை ஆகியவை சுகாதார அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளன.

மேலும், அரச சுகாதார அமைச்சின் கீழ் உள்ள ஆயுர்வேத திணைக்களம், ஆயுர்வேத வைத்திய சபை, இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களுக்கு சொந்த மான விடயதானங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தபால் திணைக்களம், அரச அச்சக திணைக்களம் மற்றும் இலங்கை அச்சக நிறுவனம் என்பன ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

மேலும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் கீழ், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலிய மொத்த விற்பனை முனைய நிறுவனம், திருகோணமலை பெற்றோலிய முனைய நிறுவனம், இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதி காரசபை உள்ளிட்ட பல நிறுவனங்களின் எல்லைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.



# கலைப்பிரிவில் மாவட்டத்தில் முதலிடம்பெற்ற வாழ்வக மாணவிக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகம் கௌரவிப்பு!

நடந்து முடிந்த க.பொ.த. உயர்தரம் கலைப்பிரிவில் யாழ்.மாவட் டத்தில் முதலிடம் பெற்ற வாழ்வக மாணவியும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவியுமாகிய செல்வி உா கேசவன் அவர்களை சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் மாலை அணிவித்து கல்வி ஊக்குவிப்பு பணம் வழங்கிக் கௌரவித்தனர்.

சுன்னாகம் லயன்ஸ் கழகமும் வாழ்வக சமூகமும் இணைந்து சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமாகிய நேற்று (சனிக்கிழமை) விழிப்புணர்வுப்பேரணிநடத்தி, வாழ்வகத்தில்பொதுக்கூட்டத்தையும் நடத்தினர். இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஸ்தாபக உறுப்பினராகிய லயன் சேது விபுலானந்தா, தனது பிறந்தநாளாகிய நேற்றைய தினத்தில் வெள்ளைப்பிரம்பு தினமும் அமைந்ததால் தானாக முன்வந்து கலைப்பிரிவில் முதலிடம் பெற்று யாழ்.மாவட் டத்தில் சாதனை படைத்த பார்வைக்குறைபாடுடைய அந்த மாணவிக்குக் கல்வி ஊக்குவிப்புத் தொகை வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




# இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் மணல்சிற்பம் கசூரினா கடற்கரையில் உருவாக்கம்

இந்தியாவின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜெ.அப்துல் கலாமின் மணல் சிற்பம் காரை நகரிலுள்ள கசூரினா கடற்கரையில் உருவாக்கப் பட்டுள்ளது.

அப்துல் கலாமின் 91ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) யாழில் நடைபெற்ற நிலையில் வேலணையை சேர்ந்த மணல் சிற்ப கலைஞர் சுப்பிரமணியம் சுகுமாரால் கலாமின் மணல் சிற்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்போது யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் காரைநகர் பிரதேச சபை தவிசாளர் க.பாலசந் திரன், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை மணல் சிற்பக் கலைஞர் சுப்பிரமணியம் சுகுமாரை ஊக்குவிக்கும் பொருட்டு இந்திய துணைத் தூதரால் ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## சீரற்ற.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குத் தேவையான நிதி, நிதி அமைச்சின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவு, மருந்து உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் துரிதமாக வழங்குமாறும், பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதார வசதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறும் அதிகாரிகளுக்கு, ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அனைத்துபிரதேசசெயலாளர்களும் அமைச்சுக்களும் ஒருங்கிணைந்து செயற்படுமாறும், நிவாரணம்வழங்கும் பணிகளில் அரச அதிகாரிகள் மற்றும் முப்படையினரின் ஒத்துழைப்பைப் பெறுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாவட்ட செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பலத்த காற்று, மண்சரிவு மற்றும் வெள்ளத்தால் திருகோணமலை, அம்பாந்தோட்டை, காலி, கிளிநொச்சி, களுத்துறை, கம்பஹா, கொழும்பு, புத்தளம், இரத்தினபுரி, கண்டி மற்றும் கேகாலை ஆகிய 11 மாவட்டங்களைச் சேர்ந்த 52 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 15 ஆயிரத்து 404 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் இன்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலவும் மோசமான காலநிலை காரணமாக நாடு முழுவதும் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காணாமல்போயுள்ளனர். அதேவேளை, 5 வீடுகள் முழுமையாகவும், 193 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட 439 குடும்பங்களைச் சேர்ந்த 1,927 பேர்நாடளாவியரீதியில்21பாதுகாப்பான நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமரிக்காவின்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

தெற்காசிய பிராந்தியம் மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் மனித உரிமைகள் நிலவரங்கள் உள்ளிட்ட விடயங்கள்பற்றி அவர்கள், இலங்கையின் அரசதலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

டொனால்ட் லூ, அண்மையில் இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மற்கொண்டிருந்தார்.

இதன்போது, இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாகவே அமெரிக்கக் குழுவினரின் இலங்கை விஜயமும் அமையவுள்ளது.

## எம்மை.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதில் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாவலப்பிட்டி தொகுதிக் கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே நாமல் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போராட்டம் குறித்து எமக்குப் பிரச்சினை இல்லை. போராட்டக்காரர்கள் தொடர்பில்தான் விமர்சனம் உள்ளது. சிலர் உண்மையாகவே 'சிஸ்டம் சேன்ஞ்'க்காகப் போராடினர். சிலர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, போராட்டத்தையே தமதாக்கிக்கொண்டனர். இதனால் என்ன நடந்தது என்பது குறித்து உண்மையான போராட்டக்காரர்கள் சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர்.

அன்று எம்மைக் கள்ளன் என்றனர். போலிக்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், சட்டபூர்வமாக அவற்றில் இருந்து நாம் விடுதலை பெற்றோம். ஆனால், இன்றும் அரசியல் இருப்புக்காக சேறுபூசும் பிரசாரத்தை அவர்கள் கைவிடவில்லை. 'கள்ளன்', 'கள்ளன்' எனக் கோஷம் எழுப்புகின்றனர்.

இவ்வாறு கூக்குரல் எழுப்புவதைவிட, சட்ட நடவடிக்கை எடுப்பதே மேலானது.

ராஜபக்சவிடம் கறுப்புப் பணம் உள்ளது எனக் கூறியவர்கள், கொழும்பில் உள்ள அக்காவுக்குப் பணம் கொடுத்துள்ளனர். அவரின் பட்டியலில் எம்மை விமர்சித்தவர்கள் உள்ளனர். சந்தர்ப்பவாத அரசியலுக்கு இடமளிக்க வேண்டாம். கொள்கை அடிப்படையிலான அரசியல்வாதிகளுக்கு ஆதரவு வழங்குங்கள் - என்றார்.

## கொழும்பில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகளை மேற்கொண்டனர் என்று கூறப்படுகின்றது.

பயணிகளிடம் கைவரிசை காட்டும் இந்த நடவடிக்கையில் ஈடுபடும் பெண்கள் சில காலமாக மக்களுடன் பயணிக்கும் போது அவர்களின் பணத்தைக் கொள்ளையடித்து வருகின்றனர்.

கைதான சந்தேகநபர் புறக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். பொலிஸ் விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப் படவுள்ளார்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622**

## தவறை.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியும் முன்னாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாவலப்பிட்டி தொகுதிக் கூட்டம் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் ஏற்பாட்டில் இன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே மஹிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது கட்சியை வெற்றிபெற வைப்பதற்கு மஹிந்தானந்த அளுத்கமகேயும், நாவலப்பிட்டி தொகுதி மக்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். இன்றும் மஹிந்தானந்த தீவிரமாக உழைத்துக் கொண்டிருக்கின்றார். மக்களும் அவர் பின்னால் நிற்கின்றனர். அந்தச் சக்திதான் எமது கட்சியின் பலமாகும்.

நாம் ஒரு நாடாக பல சவால்களை சந்தித்துள்ளோம். கொவிட் பிரச்சினையை எதிர்கொண்டு மீண்டெழ முயற்சிக்கும்போது பொருளாதாரச் சவால் ஏற்பட்டது. அதனை எதிர்கொள்கையில் பிரச்சினைகளும் ஏற்பட்டன. மன்னர் காலத்தில் இருந்தே ஆக்கிரமிப்பு போன்ற சவால்களை, ஒன்றாக இருந்து - எழுந்து எதிர்கொண்ட வரலாறு எமக்கு உள்ளது. இது தெரிந்தும், தெரியாதவர்கள் போல் சிலர் செயற்படுகின்றனர்.

சவால்களை ஏற்பதற்கு தைரியமின்றி, விமர்சனங்களை மட்டும் முன்வைத்துக் கொண்டு, சுமைகளை எம் மீது திணிக்கின்றனர். தவறுக்கு நாம் மட்டுமே பொறுப்பு என எம்மைப் பந்தாடியும் வருகின்றனர். மறுபுறத்தில் சேறுபூசும் நடவடிக்கையும் இடம்பெறுகின்றது.

தாங்கள் நல்லவர்கள் எனக் காட்டிக்கொள்ள முற்படுபவர்களும் தவறுகளை இழைத்துள்ளனர். தவறு இடம்பெறுவது இயல்பு. அதனை ஏற்க வெட்கப்பட வேண்டியதில்லை. தவறைத் திருத்திக்கொள்ள முற்படாமல் முடங்கி இருப்பதுதான் வெட்கம்.

பொதுவேலைத்திட்டத்துக்கு அழைப்பு விடுத்தாலும் வருவதில்லை. ஆட்சிகள் மாறும்போது அரச கொள்கைகளும் மாறுவது சிக்கலுக்குரிய விடயமாகும். எனவே, பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றாக இணைந்து பயணிக்க முன்வரவேண்டும் - என்றார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.10.2022இல் வெளியிடப்பெற்றது.